Registered as a Newspaper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
மக்கள் தினசரி
Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 17 [03-10-1993] ஞாயிற்றுக்கிழமை ஓலை 227

## 93/94 கல்வியாண்டில் அதிகமாணவர் பல்கலைக்கு அனுமதிக்க தீர்மானம்

பல்கலைக்கழகங்களில் 93 / 94 ஆம் கல்வியாண்டிற்காக சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு முடிவு செய்துள்ளது. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ள எண்ணிக்கையைவிட இது அதிகமாக இருக்கும் என்றும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை கூடுதலான அளவில் சேர்த்துக்கொள்ளக் கூடிய வகையில் அனுமதிக்கு தேவையான புள்ளிகளின் எண்ணிக்கையும் குறைக்கப்படவுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை எந்த சந்தர்ப்பத்திலும் குறைக்கப்படமாட்டாது என்றும், கூடுதலான மாணவர்களை சேர்த்துக்கொள்வதே உயர்கல்வி அமைச்சின் கொள்கை என்றும் உயர்கல்வி அமைச் சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். உயர்கல்வி அமைச்சர் (4 ஆம் பக்கம் பார்க்க)

# 'யாழ்தேவி' நடவடிக்கை இழப்பு

# ஹமில்டன் - தளபதிகள் மாநாடு

## அடுத்த கட்டம் குறித்து ஆலோசனை

[கொழும்பு]

'யாழ். தேவி' இராணுவ நடவடிக்கையின் போது எதிர்பாராத அளவில் இராணுவத் தினருக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து பாதுகாப்பு அமைச்சில் தளபதிகளின் உயர் மட்ட மாநாடு ஒன்று இடம்பெற்றுள்ளது. இம் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா முப்படைத்தளபதிகளுடன் யுத்தத்தின் நிலை குறித்து ஆலோ சனை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்ததாக நேற்றைய கொழும்பு தினசரி ஒன்று தெரிவித்துள்ளது,

கடந்த செவ்வாயன்று ஆரம்பிக்கப்பட்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் பெறுபேறுகளையும் அடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை குறித்தும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முப்படைத் தளபதிகளுடனும் ஆலோசனை நடத்தி உள்ளார் எனவும் அவர் இவ் விடயம் குறித்து ஆராய நேற்று யாழ். வரவிருந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது

பலதினங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த இந்த நடவடிக்கை எதிர்பார்த்தளவு வெற்றியளிக்காததால் இடைநடுவில் நிறுத்துவது குறித்து அரசாங்க உயர் மட்டத்தினருடன் சிறிலங்கா பாதுகாப்பு பிரிவினர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென்மராட்சிப் பகுதியில் மக்கள் இடம்பெயர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் பகலிரவு வேறுபாடு இன்றி சிறிலங்கா விமானப்படை விமானங்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதையடுத்து சாவகச்சேரி, எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பிற்காக இடம்பெயர்ந்து வருகின்றனர். பண்டிதர் குடியிருப்பு, பளை, மாசார், புலோப்பளை, கெற்பலி போன்ற பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து கொடிகாமம், வரணி, நுணாவில் போன்ற இடங்களிலிருக்கும் பாடசாலைகள், பொதுஸ்தாபனங்கள், கோவில்கள்போன்றஇடங்களில்தஞ்சம் புகுந்துள்ளனர்

## விடத்தற்பளை தாக்குதலில் ஐந்து பொதுமக்கள் பலி

தென்மராட்சிப் பகுதியில் உள்ள விடத்தற்பளை என்ற இடத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பாடசாலை ஒன்றின்மீது சிறிலங்கா வான்படையின் உலங்கு வானூர்தி நடாத்திய தாக்குதலின் போது ஐந்துபேர் கொல்லப்பட்டுள்ளனர். பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் விடத்தற்பளைகமலாசினி மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் மீது உலங்கு வானூர்தியிலிருந்து கைக்குண்டுகள் வீசப்பட்டதுடன், எறிகணைத் தாக்குதலும் நடாத்தப்பட்டது. இச் சம்பவத்தின்போது திருமதி மகேந்திரம் கொல்லப்பட்டார்.

அத்துடன் நேற்று மாலை 3 30 மணியளவில் இதே பாடசாலைமீது உலங்குவானூர்தியில் இருந்து கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் பூபதியம்மா (வயது 30) என்பவரும் இவரது இரண்டு பிள்ளைகளும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இவரது மற்றுமொரு பிள்ளையும் கணவரும் படுகாயமடைந்துள்ளனர். கணவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் பலியான மற்றுமொருவரின் சடலம் அடையாளம் காணப்படாது யாழ். போதனா மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. (சி).(நி).(க).(86)

## கூட்டுறவுச் சங்க லொறிமீது ஹெலி உக்கிர தாக்குதல்

(வடமராட்சி)

கப்புதூ அந்தணந்திடலில் சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று மேற்கொண்ட கலிபர் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு லொறி சேதமடைந்தது. குடிசை வீடொன்று எரிந்து நாசமாகியது.

இச்சம்பவம் நேற்று பகல்11 மணியளவில்அந்தணந்திடலில் நடைபெற்றது. அப்பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை ஒன்றில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறி பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை இச்சம்பவம் நிகழ்ந்தது.

லொறியில்இருந்து பொருள்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அப்பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி லொறியை பல தடவைகள் சுற்றி சுற்றி வட்டமிட்டவாறு அரை மணி நேரம் தொடர்ச்சியாக தாக்குதல் புரிந்ததில் லொறி சேதமடைந்தது. லொறியில் இருந்தவர்கள் லொறிக்குக் கீழ் பதுங்கிக் கொண்டதனால் ஆபத்து இன்றித் தப்பிக்கொண்டனர். அதே சமயம் அருகில் இருந்த ஒரு குடிசை வீடு முற்றாக எரிந்து நாசமாகியது.

[4ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலியில் தரிப்பதா? ராணுவ தரப்பில் குழப்பமாம்

(கொழும்பு)

கிளாலியில் பெருந்தொகையான இராணுவத்தினரைக் குவித்தும் அவர்களுக்கு உதவியாக டாங்கிகளையும் விமானப்படையினரையும் பயன்படுத்தி தொடர்ந்தும் கிளாலியில் நிலைகொண்டிருப்பதா அல்லது விடுதலைப் புலிகளின் அடிப்படை அமைப்புக்களையும் வசதிகளையும் எவ்வெளவுக்கெவ்வளவு அழிக்க முடியுமோ அவ்வளவையும் அழி

இராணுவத்தினரின் புதிய நிலைகளை விடுதலைப்புலிகள் எந்த நேரமும் தாக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இராணுவத்தினர் தமது புதிய பகுதியை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முடியுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்து.

## குண்டுவீச்சு தொடர்கிறது

(தென்மராட்சி)

கிளாலி கெற்பலி, விடத்தல் பளை, பகுதிகளில்தொடர்ந்து

## கிளாலிக் கரையில் கடற்படை தளம்?

(கொழும்பு)

கிளாலியில் கடற்படையி

சிறிலங்காவின் முப்படைகளினதும் கூட்டு நடவடிக்கைக

வானூர்தி நடாத்திய தாக்கு சினி மகா வித்தியாலயத்தில் மகேந்திரம் கொல்லப்பட்டார்.

## கூட்டுறவுச் சங்க லொறிமீது ஹெலி உக்கிர தாக்குதல்

(வடமராட்சி)

கப்புது அந்தணந்திடலில் சிறிலங்கா உலங்குவானூர்தி ஒன்று மேற்கொண்ட கலிபர் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு லொறி சேதமடைந்தது. குடிசை வீடொன்று எரிந்து நாசமாகியது.

இச்சம்பவம் நேற்று பகல்11 மணியளவில்அந்தணந்திடலில் நடைபெற்றது. அப்பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை ஒன்றில் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறி பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை இச்சம்பவம் நிகழ்ந்தது.

லொறியில்இருந்து பொருள்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயம் அப்பகுதிக்கு வந்த உலங்குவானூர்தி லொறியை பல தடவைகள் சுற்றி சுற்றி வட்டமிட்டவாறு அரை மணி நேரம் தொடர்ச்சியாக தாக்குதல் புரிந்ததில் லொறி சேதமடைந்தது. லொறியில் இருந்தவர்கள் லொறிக்குக் கீழ் பதுங்கிக் கொண்டதனால் ஆபத்து இன்றித் தப்பிக்கொண்டனர். அதே சமயம் அருகில் இருந்த ஒரு குடிசை வீடு முற்றாக எரிந்து நாசமாகியது.

[4ஆம் பக்கம் பார்க்க]

அத்துடன் நேற்று மாலை 3 30 மணியளவில் இதே பாடசாலைமீது உலங்குவானூர்தியில் இருந்து கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டதில் பூபதியம்மா (வயது 30) என்பவரும் இவரது இரண்டு பிள்ளைகளும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர். இவரது மற்றுமொரு பிள்ளையும் கணவரும் படுகாயமடைந்துள்ளனர். கணவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் பலியான மற்றுமொருவரின் சடலம் அடையாளம் காணப்படாது யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (சி).(நி).(க).(86)

# கொடிகாமம் சந்தையில் ஹெலி றொக்கட் தாக்குதல்

### - 11பேர் படுகாயம்: கடைகள் சேதம்

[நமது நிருபர்]

கொடிகாமம சந்தை மீது சிறிலங்கா வான்படை உலங்குவானூர்திகண்மூடித்தனமான றொக்கட் தாக்குதலை மேற்கொண்டதில் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுப் பகல் 11.00 மணியளவில் சந்தையில் மும்முரமாக வியாபாரம் நடந்து கொண்டிருந்த போதே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

உலங்குவானூர்தி வட்டமிடுவதைக் கண்டவுடன் மக்கள் சந்தைப் பகுதியை விட்டு வெளியே ஓடிவிட்டதாகவும் தாங்கள் ஓடுவதற்கு ஆயத்தமாவதற்கு முன் குண்டுகள் வீழ்ந்து வெடித்ததாக காயமடைந்த சந்தைவியாபாரிகள் தெரிவித்தனர்.

இத் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவர்கள் விபரம் வருமாறு: எஸ். சிவராசா[வயது39]கொடிகாமம், வி. மரியம்மா [வயது46] பளை, எஸ். வள்ளிப்பிள்ளை [வயது 50] கொடிகாமம் ஆகிய சந்தை வியாபாரிகளும் எஸ். தேவதாஸ் [வயது19]

[4ஆம் பக்கம் பார்க்க]

## பதுங்கியிருந்து தாக்கியதில் 3 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மின்வெட்டிகெங்கை என்ற இடத்தில் கடந்த 29ஆம் திகதி புதன் கிழமையன்று விடுதலைப் புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடாத்திய தாக்குதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் புவனேசலிங்கம் [கணபதிப்பிள்ளை வன்னியசிங்கம், கறப்பளை, மன்னம் பிட்டி] 2ஆம் லெப்டினன்ட் ஜேசுதாஸ் [தாமோதரம்பிள்ளை நல்லதம்பி, 11ஆம் கட்டை ஆலையடிவீதி வந்தாறுமூலை] வீரவேங்கை மனோஜன் [சிவச்சந்திரன் யோகநாதன் வேப்பையடி வீதி ஆரையம்பதி] ஆகிய போராளிகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.


## வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட விபத்து ஒன்றில் வீரவேங்கை வீமன் (தாமோதரம்பிள்ளை நிமலன் பிளவத்தை, சித்தன் கேணி.) எனும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



லெப். புவனேசலிங்கம்



2-ம் லெப். ஜேசுதாஸ்



வீரவேங்கை வீமன்

கடந்த செவ்வாயன்று ஆரம்பிக்கப்பட்ட யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் பெறுபேறுகளையும் அடுத்த கட்டமாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை குறித்தும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முப்படைத் தளபதிகளுடனும் ஆலோசனை நடத்தி உள்ளார் எனவும் அவர் இவ் விடயம் குறித்து ஆராய நேற்று யாழ். வரவிருந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது

பலதினங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த இந்த நடவடிக்கை எதிர்பார்த்தளவு வெற்றியளிக்காததால் இடைநடுவில் நிறுத்துவது குறித்து அரசாங்க உயர் மட்டத்தினருடன் சிறிலங்கா பாதுகாப்பு பிரிவினர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டுவீச்சு தொடர்கிறது

(தென்மராட்சி)

கிளாலி கெற்பலி, விடத்தல் பளை, பகுதிகளில்தொடர்ந்து நேற்று காலை தொடக்கம் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான புக்காரா, ஹெலி, சியாமாசெட்டி விமானம், சுப்பர் சொனிக்,வை 12 அவ்ரோ ரக விமானங்கள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றன. குண்டு வீச்சு சத்தங்கள் தென்மராட்சியை அதிர வைக்கின்றன. இத் தாக்குதலால் பளைபகுதியில் இருந்து கைதடி சந்தி வரை சகல வர்த்தக நிலையங்களும் பீதியால் மூடப்பட்டுள்ளன. (86)

## கிளாலியில் தரிப்பதா? ராணுவ தரப்பில் குழப்பமாம்

(கொழும்பு)

கிளாலியில் பெருந்தொகையான இராணுவத்தினரைக்கு வித்தும் அவர்களுக்கு உதவியாக டாங்கிகளையும் விமானப்படையினரையும் பயன்படுத்தி தொடர்ந்தும் கிளாலியில் நிலைகொண்டிருப்பதா அல்லது விடுதலைப் புலிகளின் அடிப்படை அமைப்புக்களையும் வசதிகளையும் எவ்வெளவுக்கெவ்வளவு அழிக்க முடியுமோ அவ்வளவையும் அழித்துவிட்டு பின்னர் அங்கிருந்து வெளியேறுவதா என்பது குறித்து சிறிலங்கா இராணுவம் இனி தீர்மானிக்க வேண்டும் என பி. பி ஸி தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

இராணுவத்தினரின் புதிய நிலைகளை விடுதலைப் புலிகள் எந்த நேரமும் தாக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இராணுவத்தினர் தமது புதிய பகுதியை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முடியுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### கிளாலிக் கரையில் கடற்படை தளம்?

(கொழும்பு)

கிளாலியில் கடற்படையினர் மிக விரைவில் புதிய கடற்படைத்தளம் ஒன்றை அமைத்துக் கொள்வார்கள் என்று சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக பி. பி. ஸி அறிவித்தது.

யாழ். தீபகற்ப பகுதியில் சிறிலங்காவின் முப்படைகளினதும் கூட்டு நடவடிக்கைகளுக்கு துணைபுரியும் நோக்குடன் இத்தளம் விரைவில் அமைக்கப்படவிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டது.

## தவறுக்கு வருந்துகிறோம்

புலோப்பளை அல்லிப்பளைப் பகுதியில்29-09-1993 அன்று நடைபெற்ற சமரில் வீரச்சாவு அடைந்தோர் பட்டியலில் இருதயநாதன் (அமிர்தநாதன் ஜெகநாதன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய் ) எனும் போராளியின் பெயர் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## செல்வது பெரிதல்ல பாதுகாப்பதே கடினம்

### டெய்லி நியூஸ் ஆசிரியர் தெரிவிப்பு

[லண்டன்]

கிளாலிப் பகுதிக்கு செல்வது பெரிய விடயம் இல்லை. அதனை படையினர் காப்பாற்றுவதே கடினமானது. இதனைப் பிடிப்பதற்கு கொடுத்த உயிரிழப்பை விட பாதுகாப்பதன்போது கூடிய உயிரிழப்பைச் சந்திக்க வேண்டி வரும். எனவே படையினர் கிளாலி போன்ற இடங்களை நீண்டகாலம் வைத்திருக்க முடியாமல் அவற்றை விட்டுத் திரும்ப வேண்டி வரும் என ''டெய்லி நியூஸ்'' பத்திரிகை ஆசிரியர் மெனிக்த சில்வா பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ''அவ்வாறு அரசபடைகள் இவ் இடங்களை விட்டுத் திரும்புமாயின் கைப்பற்றும் போது ஏற்பட்ட உயிரிழப்புகளும் டாங்கி இழப்புகளும் பாரியவை என்றே கூறவேண்டும்''.

''தற்போது நடந்துகொண்டிருக்கும் யுத்தம் பற்றிய செய்திகளை இராணுவத்தின் அறிவிப்பைக் கொண்டே அறிந்துகொள்ளமுடிகிறது. எந்த ஒரு செய்தியாளரும் யாழ்ப்பாணம் சென்று செய்திகளை பெறமுடியாத நிலை இன்று உள்ளது. எனவே அரசாங்கம் சொல்வதையே நாம் நம்ப வேண்டியுள்ளது.

[4ஆம் பக்கம் பார்க்க]

## அகோர எறிகணை வீச்சு

[தொல்புரம்]

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்றுக் காலை 6.35 மணியிலிருந்து பொன்னாலை, மூளாய் கொத்துத்துறைப் பகுதிகளை நோக்கி அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் பொன்னாலைச் சந்தியை அண்மித்த பகுதிகளிலும், மூளாய் ஐயனார் கோவிலடி வயல் வெளிகளிலும், கொத்துத்துறை கடலோரப் பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. இச் சம்பவத்தின் போது தொடர்ச்சியான எறிகணைகள் ஏவப்பட்டதனை

[4ஆம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிடில் ஏழு ஆண்டிற்குள் நாடுபிரியும்

### ஹரி குணத்திலக்கா எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறி அதற்கு இராணுவ தீர்வை ஏற்படுத்த முனைவாராயின் இரண்டாயிரம் ஆண்டளவில், அதாவது ஏழு ஆண்டுகளில் ஒற்றை ஆட்சி என்பதற்கே இடம் இல்லாமல் போய்விடும். இதனை சகல சிங்கள மக்களும் நன்குணரவேண்டுமென முன்னாள் விமானப்படை தளபதி ஹரி குணத்திலக்கா தெரிவித்துள்ளார்.

லண்டன் பி. பி. சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், சகல அரசியல் வாதிகளும் இதனை கருத்தில்கொண்டு வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை முன்வைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

விடுதலைப் புலிகளை அழிப்பது என்பதை மையமாகக் கொண்டு அரசாங்கம் செயல்படுமாயின் அது அவ்வளவு வெற்றிகரமான காரியமாக அமையமுடியாது. இராணுவ நடவடிக்கையின் மூலம் இப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. தெற்கு மக்கள் வடக்கு, கிழக்கு பிரச்சினை

[4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**மிருதங்கம்**

இரண்டு நாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்தமாக சாதம் போட்டு தரப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (6147)

**நாளை ( 4 10 93)**
**வியாழ மாற்றம்**

வாக்கியப்படி 04 - 10 - 93 இலும் திருக்கணிதப்படி 12 10 93 இலும் வியாழன் கன்னியிலிருந்து துலாராசிக்கு மாற்றமடைகின்றது. எல்லா ராசிகளின் பலன்கள் ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. ''சத்யா'' (இடிகுண்டரு காமை) கட்டுடை.
(6212)

## சஞ்சிகை வெளியீடு

[குருநகர்]

சைவ சித்தாந்த ஆய்வு வட்ட ஆங்கில சஞ்சிகையின் வெளியீடு இன்றுமாலை 4 00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் தலைமையில் நடைபெறும். வெளியீட்டு வைபவத்தில் சைவப்புலவர் பொன். தெய்வேந்திரம் மதிப்புரை நிகழ்த்துவார். [21]

# தென்மராட்சிப் பகுதியில் இரவுநேர ஹெலி தாக்கு

## இருவர் படுகாயம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பகுதிகளில் இரவு வேளைகளில் விமானத்தில் இருந்து குடியிருப்புக்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன.

வியாழனன்று இரவு 8.00 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் கலிபர் தாக்குதலை மேற் கொண்டது. இதனால் இருவர் காயமடைந்தனர்.

மேற்படி ஹெலி பின்னர் சாவகச்சேரி பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது கிறனைட் தாக்குதலையும் நடத்தியது. இதனால் அப்பகுதியில் வெட்டைக் காணி ஒன்றினுள் விழுந்ததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. தொடர்ந்தும் இக் ஹெலி எழுதுமட்டுவாழ், மிருசுவில் போன்ற இடங்களிலும் கலிபர் தாக்குதலை நடத்தியது. இதனால் மக்கள் இரவில் துயில் இன்றி பீதியுடன் காணப்பட்டனர். (86)

# யாழ். வைத்திய சாலைக்கு புதிய ஜெனரேற்றர்

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா மருத்துவமனைக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டு கொழும்பில் முடங்கிக்கிடந்த பொருள்களில் 200 கிலோவாற் மின் பிறப்பாக்கியும் அம்புலன்ஸ்வண்டி ஒன்றும் வாதுவ கப்பல் மூலம் வெகு விரைவில் எடுத்து வரவுள்ளதாக தெரிய வருகின்றது

எடுத்துவரப்படவிருக்கும் மின்பிறப்பாக்கியை வைப்பதற்கான இடம்துப்புரவு செய்யப்பட்டு புதிதாககொட்டகை ஒன்று அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை பிரிட்டனில் இருந்து 25 கொள்கலன்களே இது வரை கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இன்னும் பிரிட்டனில் இருந்து கொள்கலன்கள் பல வரவேண்டியுள்ளதாகவும் யாழ். போதனா மருத்துவமனை நிர்வாக உத்தியோகஸ்தர் தெரிவித்தார். (சி)

# திருமலை மாவட்டத்தில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை கடற்கரைச் சேனைச் சந்தியில் தமிழ்ப் பொதுமகன் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

கடந்த 29 ஆம் திகதிகாலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூதூர் கடற்கரைச் சேனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையாராகிய அருமைத்துரை அழகன் என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இதேதினம் மூதூர் பகுதியில் வைத்து கட்டைபறிச்சானைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாராகிய மாதவராசா காமினி (40) என்பவரை சிறிலங்கா இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனர்.

## நிர்வாகிகள் தெரிவு

பூரணயோக சமாஜ ஆண்டு விழாவும், அங்கத்தவர் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது. சச்சிதானந்த ஆச்சிரம சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்ற இக் கூட்டத்தில் சமாஜ தலைவராக சட்டத்தரணி தங்கராஜா இராஜராஜேஸ்வரனும், செயலாளராக கூட்டுறவு பரிசோதகர் பொன்னம்பலம் கணேசலிங்கமும், உபதலைவர்களாக ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் காசிநாதர் சிவலிங்கமும், கிராமசேவை அலுவலர் பொன்னுத்துரை தர்மபாலனும் பொருளாளராக விக்னேஸ்வரனும் சங்கப் பணிப்பாளராக திருமதி சூரசங்காரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## உலக ஆசிரியர் தின விழா

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட ஆசிரியர்கள் நடத்தும் உலக ஆசிரியர் தின விழா எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில், கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரைசிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது. இவ் விழாவில் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகவும், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். பேராசிரியர் அ. சண்முகதாசின் சிறப்புரையும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களை கௌரவித்தல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

# மாவீரர்கள் 19 பேருக்கும் பெருமளவில் மக்கள் அஞ்சலி

அல்லிப்பளை பகுதியில் இடம்பெற்ற சமரில் வீரகாவியம் படைத்து மாவீரர்களான 19 வேங்கைகளின் வித்துடல்கள் நேற்றுமுன்தினம் நெல்லியடி பஸ் நிலையப்பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. முன்னாள் வடமராட்சி தளபதியும், கனரக ஆயுதப்பொறுப்பாளருமான மேஜர் பிறேம்நாத் உட்பட 19 வேங்கைகளின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது கொட்டும் மழையிலும் பெருமளவு மக்கள் திரண்டு மாவீரர்களுக்கு தமதுஇறுதி அஞ்சலியைச்செலுத்தினர்.

வடமராட்சி மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மலையரசி தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செல்வி தேன்மொழி அரசியல்துறைபயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோர் அஞ்சலியுரையாற்றினர். மாலை 6 20 மணியளவில் மாவீரர்களின் வித்துடல்கள் வடமராட்சி மாவீரர் துயில் இல்லத்திற்கு பாண்ட் இசையுடன் எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்பட்டன.

## கலந்துரையாடல்

தற்போது நாட்டில் நடைபெற்றுவரும் யுத்த நிலை காரணமாகவும், எதிர்வரும் மாவீரர் நாள் சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று நடாத்த சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரினால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

சங்கானை வட்டவைப் பிரதேசத்தினைச் சேர்ந்த சகல வர்த்தகர்களுடனான மேற்படி கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் வட்டு இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதெனவும், இக்கலந்துரையாடலில் சங்கானைப் பிரதேச வட்டவைக்குட்பட்ட சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறும் சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (41)

# கல்முனைப்பகுதியில் மீன்பிடி

பூநகரி - கல்முனை பகுதிகளில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா ராணுவம் பின் வாங்கிக் கௌதாரி முனைப் பகுதிக்குப் போய் விட்டதை அடுத்து குருநகர், பாசையூர், கொழும்புத்துறை மீனவர்கள் அப்பகுதிக் கடலில் மீன் பிடியில் ஈடுபட்டுவருகின்றனர். [21]


# வேலை வெற்றிடம்

பாண், பாண் சார் உணவுகள் தயாரிப்பதற்கு போறணை வேலை - தட்டு வேலை - மேசை வேலை அனுபவம் மிக்க வேலையாட்களும்; சைவ, அசைவ சமையல் - பரிமாறுனர் வேலை அனுபவம் உள்ளவர்களும்


**உடன் தேவை**

4. 10. 93 திங்கள் காலை 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

**சுவையருவி**
மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி 7539]



# மிருதங்க அரங்கேற்றம்



இசைக்கலைமணி திரு. சி. துரைராஜா
சங்கீத ரத்தினம் திரு. சி. மகேந்திரன்
ஆகியோரிடம் இசை பயின்ற

செல்வன்

**பத்திநாதர் யூட ஜெமில் றாஜ்**

காலம் **03-10-1993**
ஞாயிறு [இன்று] மாலை 3-00 மணி
இடம்: இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

தலைவர்:
**அருட்திரு. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்.**
(அதிபர், புனித என்றி அரசர் கல்லூரி இளவாலை)

ஆசியுரை :
**அருட் பெருந்தகை வ. தியோகுப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற யாழ் ஆயர்)
**சிவாகம ஞானபாஸ்கரன**
**சிவஸ்ரீ தா மகாதேவக் குருக்கள்**

பிரதம விருந்தினர்;
**பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்**
(கலைப் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)
**திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்**
(பொறுப்பாளர் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்)
**கலாநிதி திரு. சபா. ஜெயராசா அவர்கள்.**
(தலைவர் இராமநாதன் நுண்கலைப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)


இசையரங்கு
பாட்டு : இன்னிசை வேந்தர்
**திரு. பொன். சுந்தரலிங்கம்**
வயலின் : சங்கீத வித்வான்
**செல்வி பாக்கியலட்சுமி நடராசா**
(விரிவுரையாளர், நுண்கலைப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)
மிருதங்கம் : **செல்வன் பத்திநாதர் யூட்ஜெமில் றாஜ்**
கெஞ்சிரா : சங்கீத இரத்தினம்
**திரு. சி மகேந்திரன்**
(உதவி விரிவுரையாளர் நுண்கலைப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)



வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

**நிதி உதவி**

# கலை நிகழ்ச்சிகள்



மாண், மாண் சார் உணவுகள் தயாரிப்பதற்கு போதனை வேலை - தட்டு வேலை - மேசை வேலை அனுபவம் மிக்க வேலையாட்களும்; சைவ, அசைவ சமையல் - பரிமாறுனர் வேலை அனுபவம் உள்ளவர்களும்

உடன் தேவை

4. 10. 93 திங்கள் காலை 10 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையில் நேரில் வரவும்.

சுவையருவி

மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி 7539]

மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. முன்னாள் வடமராட்சி தளபதியும், கனரக ஆயுதப்பொறுப்பாளருமான மேஜர் பிறேம்நாத் உட்பட 19 வேங்கைகளின் வித்துடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது கொட்டும் மழையிலும் பெருமளவு மக்கள் திரண்டு மாவீரர்களுக்கு தமதுஇறுதி அஞ்சலியைச்செலுத்தினர்.

வடமராட்சி மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மலையரசி தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. யாழ் மாவட்ட மகளிர் அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செல்வி தேன்மொழி அரசியல்துறைபயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் அரசண்ணா ஆகியோர் அஞ்சலியுரையாற்றினர். மாலை 6 20 மணியளவில் மாவீரர்களின் வித்துடல்

தற்போது நாட்டில் நடைபெற்றுவரும் யுத்த நிலை காரணமாகவும், எதிர்வரும் மாவீரர் நாள் சம்பந்தமாகவும் கலந்துரையாடல் ஒன்று நடாத்த சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரினால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

சங்கானை வட்டவைப் பிரதேசத்தினைச் சேர்ந்த சகல வர்த்தகர்களுடனான மேற்படி கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் வட்டு இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதெனவும், இக்கலந்துரையாடலில் சங்கானைப் பிரதேச வட்டவைக்குட்பட்ட சகல வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறும் சங்கானை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (41)

பிரதம விருந்தினர்;

பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(கலைப் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)

திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்)

கலாநிதி திரு. சபா. ஜெயராசா அவர்கள்.
(தலைவர் இராமநாதன் நுண்கலைப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)

இசையரங்கு

பாட்டு : இன்னிசை வேந்தர்
திரு. பொன். சுந்தரலிங்கம்

வயலின் : சங்கீத வித்வான்
செல்வி பாக்கியலட்சுமி நடராசா
(விரிவுரையாளர், நுண்கலைப் பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)

மிருதங்கம் : செல்வன் பத்திநாதர் யூட்ஜெமில் றாஜ்

கெஞ்சிரா : சங்கீத இரத்தினம்
திரு. சி மகேந்திரன்
(உதவி விரிவுரையாளர் நுண்கலைப்பிரிவு யாழ். பல்கலைக்கழகம்)

தம்புரா : இசைக்கலைமணி
திரு. அ. செல்வரத்தினம்

பெரியோர்கள், கலைஞர்கள், உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் வருகை தந்து அரங்கேற்றத்தைச் சிறப்பித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
ஆ. பத்திநாதர் குடும்பத்தினர்.

தற்போதைய முகவரி:
குருசு மதவடி லேன்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.


''செல்வ இல்லம்''
செந்தில் வீதி,
மாதகல்.

(6207)

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கம் அளிக்கும்

நிதி உதவி

# கலை நிகழ்ச்சிகள்



இடம்: யாழ் இந்துக் கல்லூரி. காலம்: 16. 10. 93 நேரம்: இரவு 6 00 மணி

நிகழ்ச்சிகள்

1. பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் "வீரதீரச் செயல்கள்" முதல் முறையாக யாழ் நகரில் அரங்கேறவுள்ளது.

(அ) நெருப்பு புதைகுழியில் சில மணிநேரம் பசித்திருக்சல்
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்
(ஈ) ஒரு வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்
(உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்.
(எ) (3'' 200 ஆணி) அடிக்கப்பட்ட பலகை மீது படுக்கவைத்து மார்பு மேலாக பாரம் உடைய உழவு இயந்திரத்தை ஏற்றுதல்.
(ஏ) துரைரெத்தினம் வாயால் மோட்டார் சைக்கிளை தூக்குதல்.

2. மோகன் மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்.
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(சி-7493) வ. யா. ஆ. ம. வ. சங்கம்

ST. PATRICK'S COLLEGE

The O.B.A Calls Old Boys & Parents

உலக ஆசிரியர் தினம்

1993-10-06 (புதன்)

எமது கல்லூரி ஆசிரியர்களையும் ஆசிரியப் பணியையும் பாராட்டுவோம்.

காலை 8 ) பெரிய கோவிலில் திருப்பலி

தொடர்ந்து மனுரம் சதுக்கத்தில் ஒன்று கூடல்

பெற்றோரையும் பழைய மாணவரையும் அழைக்கிறோம்.

சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

(6211)

மாதாந்த பரிசுத் திட்டம்
செப்டெம்பர் மாதம்

பரிசு பெறுவோர்

1ம் பரிசு சிட்டை இல. 442
S தெய்வராசா
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

2ம் பரிசு சிட்டை இல. 198
செ ரதினி
687/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

3ம் பரிசு சிட்டை இல. 302
இன். திலகர்
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் வருக! பரிசுகள் பெறுக !!

மலிவு விலையில் பொருட்கள் வாங்கிட

எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/ 7540)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-10-03

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா-கள்ளிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 20 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு அம்பாறை - கல்முனை பாண்டிருப்புப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

லெப். பாலன் (சிவலிங்கம் நவலோகப்பிரகாஷ் - பாண்டிருப்பு 02, கல்முனை - அம்பாறை)

1990ஆம் ஆண்டு யாழ் - தொண்டமானாற்றுப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-

ரவாஸ் (குமரகுரு ஜெயராசா - இன்பருட்டி, அல்வாய் வடக்கு பருத்தித்துறை - யாழ்)

1991ஆம் ஆண்டு மருத்துவமனையில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

பவா (இராஜேந்திரன் வெள்ளையன் - ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-7535]

### சிந்தனைக்கு

உன் நற்பெயரை நீ மதித்தால், நல்ல பண்புடையவர்களுடனேயே இரு உறவு கொள். கெட்ட சகவாசத்தை விடவும் தனிமையாய் இருப்பது மேலானது.

– ஜார்ஜ் வாஷிங்டன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-10-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## ஒதுங்க[illegible]ம் தேவை

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதன் முடிந்த முடிவு என்ற சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பிரகடனம், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்துள்ளது. இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வில், தங்கள் தலைகளில் 'கிரீடங்கள்' ஏறும் எனக் கனவு கண்டவர்களுக்கு டி. பி யின் முடிவு பெரும் அதிர்ச்சியை அளித்தமையில் ஆச்சரியம் எதுவுமில்லை.

ஆனால் டிங்கிரிபண்டா விஜேதுங்கா மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் யாவரும் இதேமுடிவையே கொண்டிருந்தனர். அவர்கள் தமிழ்க் குழுக்களை எவ்வளவு தூரத்திற்கு தமிழருக்கு எதிராக அரசியல், இராஜதந்திர மற்றும், இராணுவ ரீதியிலும் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு தூரத்திற்குப் பயன்படுத்திவிட்டு பின்னர் கைவிடலாம் என்றே எண்ணினர். இந்த வகையிலேயே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும் நடந்து கொண்டார். அவ்வாறு இல்லாவிடில் இத்தமிழ்க் குழுக்களின் நிலையை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தும் சிறு முயற்சியிலாவது அவர் இறங்கியிருக்கக் கூடும். குறைந்தது பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமாவது தமது தீர்வு யோசனைகளை முன்வைத்திருக்கலாம்.

டி. பி. விஜேதுங்கா முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைப்போல் அல்லாது வெளிப்படையாகவே தனது நிலைப்பாட்டை வெளியிட்டு விட்டார். இந்தவகையில் டி. பி. விஜேதுங்கா ஒளிவு மறைவு அற்றவர் என்றே கூறலாம். இதேவேளை டி. பி. விஜேதுங்காவின் இம்முடிவு அனுபவத்தின் பாற்பட்டதாகவும் இருக்கலாம். அதாவது, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் யாவும் எந்தவித அரசியற் பலமுமற்றவர்கள் என்பதை அவர் புரிந்து கொண்டிருக்கலாம். அத்தோடு, இவர்களின் இராணுவ அரசியல் ரீதியான ஒத்துழைப்பால் உலகத்தை ஏமாற்ற முடியாது என்பதையும் அவர் விளங்கிக் கொண்டிருக்கலாம்.

இதேவேளை, சிங்களப் பேரினவாதத் தலை

# தப்பி ஓடிய 3000 படையினர் அரசால் துரத்திப் பிடிப்பு

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பிஓடிய படையினர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதுவரை தப்பிஓடிய படையினரிலிருந்து 18 படை அதிகாரிகளும் 3000 படையினரும் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உடனடியாக மன்னிப்பு அளிக்கப்பட்டு முன்னர் வேலை செய்த வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இவர்கள் தப்பிஓடியதற்காக பாதுகாப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப்படவேண்டும். ஆனால் இவர்கள் முன்னர் வேலை செய்த இடங்களுக்குச் செல்ல சம்மதித்ததனால் முதலில் மன்னித்து பின்னர் வேலை செய்த இடங்களுக்கு அனுப்பி வைக்கும்படி இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

தற்போது இவர்களை வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## கருத்தரங்கு

கிராமிய பொருளாதார நடவடிக்கைகளில் பெண்கள்பங்கு பற்றல் என்ற விடயம்தொடர்பான கருத்தரங்கு ஒன்றை நடாத்த மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. இன்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெறஇருக்கும் இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக செல்வி புஷ்பா செல்வநாயகம் அவர்களும், மற்றும் டாக்டர் நச்சினார்க்கினியன், திருமதி சரோஜா சிவச்சந்திரன், நவநீதம் ஜெகதீசன், ஏ. சக்திவேல் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

★

சங்கநாதத்தினர் நடத்தும் 'நான் ரசித்த கவிதை' என்பது பற்றிய கருத்தரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இ. முருகையன், காரை. செ.சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், ஜெ. சி. ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

## வீதி ஒழுங்கு பேணுவதில் மாணவர்கள் ஈடுபாடு

புலோப்பளை பகுதியில் இடம்பெற்று வரும் சமரில் காயமுற்றவர்களை ஏற்றி வரும் வாகனங்களுக்கு வீதிகளில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்கும் கடமையில் மாணவர்கள்ஈடுபட்டுள்ளனர். கைதடியில் இருந்து பிரதான வீதி வழியாக நாவற்குழி வெளிவரையிலான பகுதியில் யாழ்.நாவற்குழிசம்பலப்பிட்டி

# கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு

## புலிகள் தாக்கலாமென அச்சம்

(கொழும்பு)

சிறிலங்கா தலைநகரில்பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. புலிகள் வெடிகுண்டு வைத்து முக்கிய இலக்குகளை தாக்கலாம் என்பதற்காகவே இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்த இருப்பதாக தெரியவருகின்றது.

எந்த நேரமும் கொழும்பில் குண்டுகள் வெடிக்கலாம் என்பதற்கு அஞ்சியே கொழும்பு நகரில் முக்கிய கட்டடங்கள், சிறு நகரங்கள், வாகனங்கள் என்பன சோதனையிடப்பட்டுள்ளதாகவும் பல கேந்திர நகரங்களில் சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக எல்மோ பெனாண்டோ சந்தேசியவுக்கு தெரிவித்துள்ளார்.

# சிங்களவருக்கு காணிகள் பகிர்ந்தளிக்க முயற்சி

## தோட்ட தொழிலாளர் கவலை

[கொழும்பு]

கொத்மலை கெட்டபுனா தோட்டத்தில் 38 ஹெக்டெயர் தோட்டக் காணியை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் முயற்சியில் கொத்மலை பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது.

தற்போது தனியார் கம்பெனி நிர்வாகத்தின் கீழ் உள்ள கொத்மலை கெட்டபுனா தோட்டத்தின் தும்பகஸ்தலாவ டிவிஷனில் அடங்கும்காணியைஜனசவிய உதவி பெறும் சிங்களவருக்கு பகிர்ந்தளிக்க எடுக்கப்படும் முயற்சியினால் தோட்டத்தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புறுவர் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட இருக்கும் காணிக்குள் தொழிலாளர் குடியிருப்புகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இத்தோட்டத்தில் 1984 ம் ஆண்டுமுதலே தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வேலை வழங்கப்படவில்லை எனவும் இத்தகைய காணிப் பகிர்ந்தளிப்பு முயற்சி கடந்த வருட செப்டம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டபோது தொழிலாளர்கள் எதிர்த்தமையினால் கைவிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

காவத்தை பிளாண்டேசன் என்னும் தனியார் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் இத்தோட்டத்தில் உள்ள 211 ஏக்கர் காணியில் 150 ஏக்கர் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டது சுட்டிக்காட்டத்தக்கது.

# தென்னிலங்கை இளைஞர்கள் படையினரால் படுகொலை

[கொழும்பு]

தென்னிலங்கையில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த 385 இளைஞர்கள் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு குற்றுயிராக கிடந்த நிலையில்ரயர்போட்டு எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் என சிங்கள பத்திரிகையாளர் குழுவொன்று தெரிவித்தது.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மாவத்த கிராமத்திலி... நுவரெலிய மாவட்டத்தின் குமால் ஒழுவ கிராமத்திலிருந்து 46 இளைஞர்களும், அநுராதபுரம் தேர்தல் தொகுதியில் 93 இளைஞர்களும் இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் அடங்குவர்.

இக்கொலைச் சம்பவங்கள் 1989இல் இடம்பெற்றன. இதே வேளை இக்காலப்பகுதியில் சுமார் பத்தாயிரம் சிங்கள இளைஞர்கள் தென் மாகாணத்தில் மட்டும் கொல்லப்பட்டமைக்கு ஆதாரங்கள் இருப்ப

# தொற்றுநோய் பாதுகாப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இருந்து இடம்பெயர்ந்து நாவற்குழி லவனிதா குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மக்களுக்கு தொற்றுநோய்களில் இருந்து பாதுகாப்பாக இருக்கும் வழிமுறைகள் பற்றி கருத்தரங்கின்மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கைதடி பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் திரு எஸ். ரவீந்திரன் மேற்படி மக்கள்லவனிதா குடியிருப்பிற்குள் வந்து சேர்ந்த கையோடு அவர்களை அழைத்து சுகாதார அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதோடு குடியிருப்பில் சுகாதாரம் பேணப்படுவதையும் கண்காணித்து வருகிறார் [22[

# புலிகளை பலவீனப்படுத்துவதே முக்கிய நோக்கமாம்

## ராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியை மீட்பதற்காக இல்லை என்றும், விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதே இந்த இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம் என இராணுவ பேச்சாளர் நளின் அங்கம்மன்ன தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கை தொடர்பாக கடந்த வியாழன் பத்திரிகையாளருக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இது தொடர்பாக பாதுகாப்பு குழுவில் முடிவு எடுக்கப்பட்டதாகவும், இதன் முக்கிய இலக்கு கூடிய அளவு நேரடி யுத்தத்தில் விடுதலைப் புலிகளை ஈடுபடச்செய்து அதன் மூலம் அப்பகுதியை இலகுவாக மீட்க முடியும் என்றும் இத்திட்டம் வெற்றியடையும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிராமிய வங்கி புனரமைப்பு ஜனவரியில் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் வடபிராந்தியத்திலுள்ள சகல கிராமிய வங்கிகளும் மீண்டும் புனரமைக்கப்படும். இதன் மூலம் கிராமிய மக்களின் வங்கி நடவடிக்கைகள் மேலும் துரிதப்படுத்த முடியும் என மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் வங்கிகள் வைப்புகளை ஏற்பதில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடாது. மக்களுக்கு கடன் வசதிகளை வழங்கவும் அவை முன்வர வேண்டும் என்றும் கிராமிய வங்கிகளே அபிவிருத்தித் தேவைகளை செவ்வனே அறியக்கூடியவையாகும் என்றும், கிராமிய வங்கிகளின் புனரமைப்பின் மூலம் குறிப்பாக கிராமிய மக்கள் நன்மையடைவார்கள் என்றும் தெரிவித்தார். [நி]

# கெற்பலி குடியிருப்பில் பாடசாலை பலத்த சேதம்

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம்[வெள்ளி] காலை கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர் நடாத்திய தாக்குதலால் அங்குள்ள பாடசாலை சேதமடைந்துள்ளது. குடியிருப்பு மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையின் மீது ஹெலியில் இருந்து கைக்குண்டு வீசப்பட்டதால் பாடசாலை கூரை சீற் உடைந்து பலத்த சேதம் அடைந்துள்ளது அத்துடன் இக் குடியிருப்பின் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் நான்கைந்து வீடுகள் தீப்பற்றி... தனால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை,. [22]

## நினைவு பேருரை

வேலணைக் கல்விக் கோட்டத்தில் கடமையாற்றி அமரத்துவமடைந்த கல்வி அதிகாரி திரு. சு. சண்முகநாதன் நினைவுப் பேருரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு சென்ஜோன்ஸ் அக்கடமியில் இயங்கிவரும் யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில்நடைபெற உள்ளது.

இன்றைய வானிலை நிகழ்வு எனும் பொருள் பற்றி யாம்

விட்டு பின்னர் கைவிடலாம் என்றே எண்ணினார். இந்த வகையிலேயே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும் நடந்து கொண்டார். அவ்வாறு இல்லாவிடில் இத்தமிழ்க் குழுக்களின் நிலையை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தும் சிறு முயற்சியிலாவது அவர் இறங்கியிருக்கக் கூடும். குறைந்தது பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமாவது தமது தீர்வு யோசனைகளை முன்வைத்திருக்கலாம்.

டி. பி. விஜேதுங்கா முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைப்போல் அல்லாது வெளிப்படையாகவே தனது நிலைப்பாட்டை வெளியிட்டு விட்டார். இந்தவகையில் டி. பி. விஜேதுங்கா ஒளிவு மறைவு அற்றவர் என்றே கூறலாம். இதேவேளை டி. பி. விஜேதுங்காவின் இம்முடிவு அனுபவத்தின் பாற்பட்டதாகவும் இருக்கலாம். அதாவது, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் யாவும் எந்தவித அரசியற் பலமுமற்றவர்கள் என்பதை அவர் புரிந்து கொண்டிருக்கலாம். அத்தோடு, இவர்களின் இராணுவ அரசியல் ரீதியான ஒத்துழைப்பால் உலகத்தை ஏமாற்ற முடியாது என்பதையும் அவர் விளங்கிக் கொண்டிருக்கலாம்.

இதேவேளை, சிங்களப் பேரினவாதத் தலைவர்களின் இந்நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ளாதது தமிழ்க் குழுக்களின் தவறே ஒழிய சிங்களத் தலைவர்களின் தவறு அல்ல. ஆனால், தமிழ்க் குழுக்கள் இதனை முழுமையாக விளங்கிக் கொள்ளாமல் இருந்திருக்க முடியாது என்றும் சொல்வதற்கில்லை. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டால் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதற்குச் சமனானது என்பது தமிழ்க் குழுக்களுக்குத் தெரிந்த விடயம்தான். ஆனால், புலிகளைத் தோற்கடிக்க தேசிய இனப் போராட்டத்தையே காட்டிக் கொடுக்க அவர்கள் தயாராக இருந்தார்கள். அதனால், சில அற்ப சொற்ப சலுகைகள்தானும் கிட்டும் என்றே எதிர்பார்த்தார்கள். ஆனால், டி. பி. விஜேதுங்கா அரசு முற்றாகக் கைவிரித்து விட்டமையானது அவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்நிலையில்தான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தயவை நாடும் முயற்சியில் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் தற்பொழுது ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. யாரிடமாவது ஒட்டிவாழ்ந்தே பழக்கப்பட்டுவிட்ட இக்குழுக்களுக்கு தற்பொழுது ஒட்டிக் கொள்ள யாராவது தேவைப்படுகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி எந்த விதத்திலும் இன ஒடுக்குமுறையில் ஐ. தே. கட்சிக்குச் சளைத்த கட்சி அல்ல இன ஒடுக்குமுறைக்கு ஆதரவாக முதலில் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்களும், டட்லி - செல்வா ஒப்பந்தத்தைக் குழப்பியவர்களும், 1972ஆம் ஆண்டு புதிய யாப்பின் பிரகாரம் சிறுபான்மையின் உரிமைகளை அரசியல் யாப்பு ரீதியாகப் பறித்தவர்களும் அவர்களே ஆகும்.

இந்நிலையில், தமிழ்க் குழுக்களின் முயற்சியானது கொழும்பில் நிழல் தேடும் முயற்சியே ஒழிய இனப்பிரச்சினைத் தீர்விற்கு வழிதேடும் ஒரு முயற்சியல்ல. முன்னர் இந்தியாவுடன் நின்றார்கள். பின்னர் ஐ. தே. கட்சியுடன் நின்றார்கள். தற்பொழுது சுதந்திரக் கட்சியிடம் போய்ச் சேரப் பார்க்கின்றார்கள். ஆனால், முதலில் மாளிகை இருந்தவனிடமும், பின்னர் வீடு உள்ளவனிடமும் தங்க இடம் கேட்டவர்கள், ஏதோ நியாயம் இருந்தது. தற்பொழுது வீடே இல்லாதவனிடம் அறை கேட்க முற்படுவதுதான் வேடிக்கையானது.

---

'நான் ரசித்த கவிதை' என்பது பற்றிய கருத்தரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இ. முருகையன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஜெ. சி. ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

### வீதி ஒழுங்கு பேணுவதில் மாணவர்கள் ஈடுபாடு

புலோப்பளை பகுதியில் இடம்பெற்று வரும் சமரில் காயமுற்றவர்களை ஏற்றி வரும் வாகனங்களுக்கு வீதிகளில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்கும் கடமையில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். கைதடியில் இருந்து பிரதான வீதி வழியாக நாவற்குழி வெளிவரையிலான பகுதியில் யாழ். நாவற்குழி சம்பலப்பிட்டி அ. த. க. பாடசாலை மாணவர்கள் சிவப்பு, பச்சைக் கொடியுடன் வீதி ஒழுங்குப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (86)

---

தளிக்க எடுக்கப்படும் முயற்சியினால் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்புறுவர் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட இருக்கும் காணிக்குள் தொழிலாளர் குடியிருப் என்னும் தனியார் கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் இத்தோட்டத்தில் உள்ள 211 ஏக்கர் காணியில் 150 ஏக்கர் ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டது சுட்டிக்காட்டத்தக்கது.

## தென்னிலங்கை இளைஞர்கள் படையினரால் படுகொலை

[கொழும்பு]

தென்னிலங்கையில் நான்கு கிராமங்களைச் சேர்ந்த 385 இளைஞர்கள் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு குற்றுயிராக கிடந்த நிலையில்ரயர்போட்டு எரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் என சிங்கள பத்திரிகையாளர் குழுவொன்று தெரிவித்தது.

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மாவத்த கிராமத்திலிருந்து 173 இளைஞர்களும், குண்டசாலை தேர்தல்தொகுதியின் அரத்ன கிராமத்திலிருந்து 63 இளைஞர்களும், நுவரெலிய மாவட்டத்தின் குமால் ஒழுவ கிராமத்திலிருந்து 46 இளைஞர்களும், அநுராதபுரம் தேர்தல் தொகுதியில் 93 இளைஞர்களும் இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் அடங்குவர்.

இக்கொலைச் சம்பவங்கள் 1989இல் இடம்பெற்றன. இதே வேளை இக்காலப்பகுதியில் சுமார் பத்தாயிரம் சிங்கள இளைஞர்கள் தென் மாகாணத்தில் மட்டும் கொல்லப்பட்டமைக்கு ஆதாரங்கள் இருப்பதாகவும், கணக்கிடப்படாமல் இன்னும் பல கொலைகள் இருப்பதாகவும் அக் குழுவினர் மேலும் தெரிவித்தனர் (நி)

---

...ள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் வங்கிகள் ...ர்கள் என்றும் தெரிவித்தார். [நி]

## கெற்பலி குடியிருப்பில் பாடசாலை பலத்த சேதம்

[யாழ்ப்பாணம்]

நேற்று முன்தினம் [வெள்ளி] காலை கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர் நடாத்திய தாக்குதலால் அங்குள்ள பாடசாலை சேதமடைந்துள்ளது. குடியிருப்பு மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையின் மீது ஹெலியில் இருந்து கைக்குண்டு வீசப்பட்டதால் பாடசாலை கூரை சீற் உடைந்து பலத்த சேதம் அடைந்துள்ளது அத்துடன் இக் குடியிருப்பின் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் நான்கைந்து வீடுகள் தீப்பற்றி எரிந்து விட்டதாக தெரியவருகின்றது. குடியிருப்பில் இருந்து பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்திருப்பதனால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை,. [22]

---

### நினைவு பேருரை

வேலணைக் கல்விக் கோட்டத்தில் கடமையாற்றி அமரத்துவமடைந்த கல்வி அதிகாரி திரு. சு. சண்முகநாதன் நினைவுப் பேருரை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு சென்ஜோன்ஸ் அக்கடமியில் இயங்கிவரும் யா/ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில்நடைபெற உள்ளது.

இன்றைய வானிலை நிகழ்வு எனும் பொருள் பற்றி யாழ் பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் திரு. செ. பாலச்சந்திரன் உரை நிகழ்த்துவார். (17)

---

## உடன்பாட்டை ஏற்க பாராளுமன்ற பிரதிநிதிகள் மறுப்பு

ரஷ்யப் பாராளுமன்றத்தின் கன்சர்வேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதிபர் யெல்ட்சினுக்குமிடையே நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட உடன்பாட்டை ரஷ்ய பாராளுமன்றம் நியமித்த அமைச்சரவையின் முக்கிய அமைச்சர்கள் நிராகரித்துள்ளனர்.

ரஷ்யப் பாராளுமன்றத்திற்கு முன்பாக இருந்த தடையை நீக்கவும், பாராளுமன்றத்திற்கு தொலை பேசி மின்வசதி என்பவற்றை வழங்கவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

ரஷ்ய அதிபரின் பிரதிநிதிகளுக்கும், பாராளுமன்ற பிரதிநிதிகளின் தூதுக்குழுவிற்கும் இடையே நடந்த பேச்சுகளின் போதே இந்த இணக்கம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சாணம் ஏற்றுபவர்களுக்கு தோட்ட நிர்வாகம் தண்டனை

(ஹாலி எல)

வெளியார் டிராக்டர்களில் வந்து இயற்கை உரமான மாட்டுச் சாணத்தை ஏற்றிச் செல்வதால் பெருந்தோட்டங்களின் பாதைகள் பாதிக்கப்படுகிறது எனஹாலி எல பகுதியில் தோட்ட நிர்வாகம் கூறியுள்ளது. இந்த நிர்வாகம் இக்காரணத்திற்காக மாட்டுச் சாணத்தை வெளியாருக்கு விற்ற தோட்டத் தொழிலாளர் மீது தலா நூறு ரூபா முதல் இருநூறு ரூபா வரையிலான தண்டப்பணம் விதித்து அறவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அமைதி காப்புப் பணியில் ஈடுபட ஐ. நா. அவசரம் காட்டக்கூடாது

### –இந்திய வெளியுறவு அமைச்சர்

ஐக்கிய நாடுகள்சபை அமைதிகாக்கும் பணியில் ஈடுபடுவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட உறுப்பு நாடுகளுடன் பிரச்சினைகளை அமைதியாகத் தீர்ப்பதற்குரிய எல்லா வழிகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பேரவையில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும், எல்லைக்கு அப்பாலிருந்து உதவி பெறும் பயங்கர வாதத்தால் பாதிக்கப்படும் நாடுகளில் இந்தியா முக்கிய இடம் பெறுவதாகவும்தெரிவித்தார்,

அத்துடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட நாடுகளின் ஒப்புதலோடும் எல்லோர் தரப்பினதும் அங்கீகரிப்புடனும், ஜனநாயக ரீதியில் அமைதிப் படை நடவடிக்கை பற்றிய முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்எனத்தெரிவித்தார்.

---

# தேர்தல் ஆணையகத்தில் மாற்றம் அவசர சட்டம் பிரகடனம்

## குடியரசுத் தலைவர் அறிவிப்பு

[புதுடில்லி]

இந்தியா தேர்தல் ஆணையகம் பல உறுப்பினர்களைக் கொண்டதாக விரிவாக்கும் அவசரச் சட்டமொன்றினை இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா பிரகடனம் செய்துள்ளார்.

இச் சட்டத்தின மூலம் தேர்தல் ஆணையகத்தின் பணி நிபந்தனைகளும் மாற்றிஅமைக்கப்பட்டுள்ளன. தலைமைத் தேர்தல் ஆணையாளரின் சம்பளம் மற்றும் பணிக் கொடுப்பனவுகள் யாவும் பொருந்தும் வகையில் மேலும் இருவர் தேர்தல் ஆணையாளர்களாக நியமனம் செய்யப்பட்டிருப்பதுடன், எந்தவொரு விடயத்திலாவது தலைமைத்தேர்தல் ஆணையாளருக்கும் ஏனைய ஆணையாளர்களுக்கும் கருத்து மாறுபாடு ஏற்பட்டால் பெரும்பான்மைக் கருத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் என்று அறிவுறுத்தலும் விடுக்கப்பட்டிருக்கின்றது.

---

### மீட்பு நடவடிக்கை

மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகமாநிலங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கான மீட்பு நடவடிக்கைகள் யாவும் போர்க்கால அடிப்படையில் துரித கெதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, இந்த உதவிப் பணிகளில் அரசாங்க அமைப்புகளுடன் இணைந்து இராணுவத்தினரும், துணை இராணுவ பிரிவினர்களும் ஈடுபட்டுள்ளனர், இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருபத்தெட்டாயிரம் வரை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இடிபாடுகளிலிருந்தும், சிதைவுகளிலிருந்தும், சுமார் ஒன்பதயிரம் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## தேர்தல் ஆணையாளர்களாக மேலும் இருவர் நியமனம்

(டில்லி)

இந்தியாவின்தேர்தல்ஆணையகத்திற்கு ஆணையாளர்களாக மேலும்இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இது காலவரை தனிநபர் ஆணையகமாகச் செயற்பட்டுவந்த தேர்தல் ஆணையகத்திற்கு மத்திய வேளாண் துறை செயலாளர் எம். எஸ். சில், சட்டக் கமிஷனின் முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவினால் தேர்தல் ஆணையக ஆணையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணையகத்திற்கு மேலதிகமாக இருவர் நியமிக்கப்பட்டுள்ளமையை பல்வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்று கருத்து வெளியிட்டுள்ளன.

## பிரதமர் ராவின் விஜயம் இடை நிறுத்தப்பட்டுள்ளது

(டில்லி)

மகாராஷ்டிரா மாநிலத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிடும் திட்டத்தைஇந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஒத்தி வைத்துள்ளார். மீட்பு உதவிப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளின் கவனம் திசை திருப்பப்படாமல் இருப்பதற்காக இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் அலுவலகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதிகளில் பெருத்த மழை பெய்து வருவதாகவும் இதனால் மீட்பு உதவிப் பணிகள் அனைத்தும்தாமதமடைந்திருப்பதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

## வெண்கட்டி கரும்பலகைமை நாளை பெற்றுக்கொள்க

வெண்கட்டி, கரும்பலகைமை ஆகியவற்றுக்குவிண்ணப்பித்து இதுவரை பெற்றுக்கொள்ளாத சகலபாடசாலை அதிபர்களும் நாளை திங்கட்கிழமை காலை 9.00மணிமுதல் 12.00 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அவற்றிற்குரிய பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். அன்றைய தினம் பெற்றுக் கொள்ளத் தவறுவோருக்கு பின்பு வழங்கப் படமாட்டாதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்

## இலங்கையில் அமைதி ஏற்பட இந்தியா அக்கறையாம்

### இந்திய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் அமைதி ஏற்படவேண்டும் என்பதில் இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது என்றும் சகல சமூகங்களினதும், கட்சிகளினதும் ஒத்துழைப்போடு மீண்டும் அமைதி தோன்றும் என்று நம்புவதாகவும் கொழும்பிலுள்ள இந்தியத்தூதுவர் நரேஷ்வர் தயாள் தெரிவித்தார்.

கொழும்பில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூரைச் சந்தித்துப் பேச்சு நடத்திய அவர் இந்தியாவுடனான வர்த்தகத்தை பேம்படுத்துவது பற்றி ஆராய்ந்ததாகவும், பரஸ்பரம் அக்கறைக்கு உரிய விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசித்ததாகவும் குறிப்பிட்டதோடு, இந்தியாவின் மகாராஷ்டிரா, கர்நாடக மாநிலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின்போது இலங்கை காட்டிய அக்கறைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

KILLER INSTINCT

(கொலை வெறி)

(முழுநீளத்தாக்குதல் சித்திரம்)

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10-30 மணி,

மாலை 4-00 மணி, 6-00மணி

(ஒ-7352)


## சர்வதேச நல்லொழுக்க தினம்

மது விலக்கல், சமாதானம், சகோதரத்துவம் என்னும் உயர் ஒழுக்க பண்பாட்டு ரீதியின் அடிப்படையில் மது போதையற்ற சமாதான, சகோதரத்துவமான ஜாதி, மத பேதமற்ற ஒழுங்கான சுயமான வாழ்க்கையை நோக்கி ஒவ்வொருவரையும் முன்னேற்றும் முயற்சியே சர்வதேச நல்லொழுக்க அமைப்பின் இலட்சியமாகும்.

உலகளாவிய ரீதியில் அக்டோபர் 03 இத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வகையில் 53 நாடுகளின் அங்கத்துவத்துடன் இயங்கி வரும் சர்வதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஒரு அங்கமாகிய வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் இத்தினத்தில் அமைதியாக, உணர்வுபூர்வமான முறையில் வடபிரதேச மக்களின் நல்லொழுக்க விருத்திக்காக பிரார்த்திக்கும் வகையில் அக்டோபர் 03 இனை அமைதியாக கொண்டாடுகிறது.

வட பிராந்திய நல்லொழுக்க சம்மேளனம் அற்றும்

# யுத்தம் தோல்வியுற்றால் கிடைப்பது ஆறு அடி குழியே

### - ஜே. ஆர். தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கட்சி தோல்வியுற்றால் போய்விழுகின்ற இடம் எதிர்க்கட்சித் தலைவர் ஆவது தான்; ஆனால் யுத்த கருமம் ஒன்று தோல்வியுற்றால் ஆறு அடி குழியில் போய் இருக்கவே நேரிடும். யுத்தக் காரணங்களையும் அரசியல் காரணங்களையும் கலந்து குழப்பிக் கொள்வது சரியல்ல.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது 86வயது பூர்த்தியானதை முன்னிட்டு கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியின்போது தெரிவித்தார்.

இந்தியப் படையை தருவித்ததும் யுத்த தீர்மானமாகும். மீண்டும் அனுப்புவதும் யுத்த தீர்மானமாகும் என்று அப்பேட்டியின்போது அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மீறிய விடுதலைப்புலிகளை மடக்கவே இந்தியப் படை அனுப்பிவைக்கப்பட்டது.

சில மாதங்களுக்குள் முழுமையான வெற்றியை பெறவிருந்த வேளையில் இதுவரையில் பெற்ற வெற்றியை கருத்திற்கொள்ளாது இந்தியப் படையை திரும்பிச்செல்லுமாறு கேட்கப்பட்டது.

என்னிடம் கேட்டு அவ்வாறு செய்யப்படவில்லை. நான் இங்கு கூறியதை இதற்கு முன்னர் எங்கும்வெளியிடவில்லை.

இந்தியப்படையினர் வாபஸ் பெறப்படவேண்டும் என்ற செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாகியதைக் கண்டு அன்றைய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன என்னிடம் ஓடிவந்தார். அழுவதுபோன்று பேசினார். இவ்வாறு செய்தது ஏன்? இந்த விதத்தில் செய்தது ஏன்? என என்னிடம் கேட்டார்.

விடுதலைப் புலிகளின் உயிர் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியப்படையை வெளியேற்றுவது சரியா? குற்றுயிராகக் கிடக்கும் நோயாளிக்கு ஒட்சிசன் கொடுப்பது போலில்லையா? எனக் கேட்டார்.

அந்த ஒட்சிசன் கொடுக்கப்பட்டது முதல்தான் வடக்கு-கிழக்குப் பிரச்சினை வேரோடியது போன்ற நிலை ஏற்பட்டது.

இப் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. ஒரு நாள் திருக்கோணமலையில் வீடொன்றில் பாராளுமன்ற உறுப்பினர் சிலரோடு பேசிக்கொண்டிருந்தேன், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் இந்தியா போராளிக் குழுக்களுக்கு தொடர்ந்து உதவிக்கொண்டிருக்குமேயானால் நீங்கள் இருப்பது இந்த திருக்கோணமலை வீட்டிலல்ல; ஆறு அடி குழியில்தான் என நான் அவர்களுக்குச் சொன்னேன் என்று அவர் தமது பேட்டியில் தெரிவித்தார்.

## சிங்களவர் பொறுமையை ஹமில்டன் போற்றுகிறார்

சிங்கள மக்களின் தன்னடக்கம், பொறுமையை போற்ற வேண்டும் என்று புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆனந்தா கல்லூரியில் க.பொ.த. [உயர்தரம்] மாணவர்கள் மத்தியில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெற்கில் உள்ள சிலர் இந்தப் போரை தமது சுயநலத்திற்காக நீடிக்க விரும்புகிறார்கள் என்ற கூற்றில் எந்த அடிப்படையும் இல்லை.

இது நொந்த உள்ளம் கொண்டவர்களின் காட்டுமிராண்டித்தனமான குற்றச்சாட்டாகும்.

சிங்கள மக்கள் துர்நிகழ்வுகளில் பொறுமையையும், தன்னடக்கத்தையும் கடைப்பிடிப்பதை எல்லோரும் போற்ற வேண்டும் என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## சனி, ஞாயிறு திறந்திருக்கும்

[யாழ்ப்பாணம்]

தற்சமயம் யாழ். குடாநாட்டில் நிலவிவரும் போர்க்கால சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு வர்த்தகத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் சகல விற்பனை நிலையங்களும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரமாக திறந்திருக்குமென வர்த்தகத் திணைக்கள முகாமையாளர் தெரிவித்தார்.

எனவே மேற்குறிப்பிட்ட நாட்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து விற்பனையை மேற்கொள்ளுமாறு அவர் சகல விற்பனை நிலையங்க

# பூமியதிர்ச்சியால் இறந்தோர் 35 ஆயிரமாக அதிகரிப்பு

(டில்லி)

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் இந்தியாவில் நடக்கும் இயற்கை அழிவுக்காக நிதி உதவியை இதுவரை காலமும் ஏற்க மறுத்துவந்த இந்திய அரசு இப்போது வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவியை ஏற்க முன்வந்துள்ளது.

நிலநடுக்கத்தால் மகாராஷ்டிரா மாநிலத்தில் வீடுகளை இழந்திருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் மக்களுக்கு இருப்பிடம் வழங்க சுமார் 250 கோடி ரூபா தேவை என மகாராஷ்டிரா முதலமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

அதேவேளை, மகராஷ்டிரத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 35,000 தாண்டக்கூடும் என அஞ்சப்படுகிறது. இதுவரை சுமார் 12,000 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால் நிவாரணப் பணி தாமதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உதவி அரச அதிபரை சந்திக்கலாம்

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபரை சந்திக்கவிரும்

## கட்டடத் தொழிலாளருக்கு நிவாரணம் வழங்குக

### -பிரதேச செயலரிடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கட்டடத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தைத் தொடர்ந்தும் வழங்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தொழிலாளர் சங்கத்தின் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளை மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

கடந்த வருடம் முதல் வழங்கப்பட்டுவந்த மேற்படி உலர் உணவு நிவாரணம் இந்த ஆண்டு முற்பகுதியில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த நிவாரண விநியோகத்தை தொடர்ந்தும் வழங்கும்படி கோரும் மகஜர் ஒன்றை சங்கானை பிரதேச செயலாளரிடம் மேற்படி கட்டடத்தொழிலாளர் சங்கக் கிளை சமர்ப்பித்திருக்கிறது.

[க]

## பச்சிலைப்பள்ளி மக்களுக்கு 2 வார உலர் உணவு

[தென்மராட்சி]

பச்சிலைப்பள்ளி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 3000 பேருக்கு மேற்பட்ட மக்களுக்கு இரண்டு வாரத்திற்கான உடனடி நிவாரணத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்போது மிருசுவில் வடக்கு, மிருசுவில், உசன், கொடிகாமம் நாவற்காடு, வரணி, கல்வயல் பகுதிகளில் தங்கியிருப்பதாகவும் அவர்களுக்கு தற்போது 2 வாரத்திற்கான நிவாரணம் பலநோக்கு கூட்டுறவு சங்க மூலம் வழங்க ஆரம்பித்துள்ளது என தென்மராட்சி உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## அதிக தொகை அகதிகளை அனுமதிக்க அமெரி. முடிவு

அடுத்த ஆண்டு செப்டெம்பரில்இருந்து அமெரிக்காவுக்கு வரும் அகதிகள் தொகையை ஒரு லட்சத்து 21ஆயிரமாக அதிகரிக்க அமெரிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

சென்ற வெள்ளிக்கிழமை வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் இவ்விபரத்தை தெரிவித்துள்ளார். இதன்படி பழைய சோவியத் குடியரசையும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் சேர்ந்த 55 ஆயிரம் அகதிகளுக்கும் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த 45 ஆயிரம் அகதிகளுக்கும் புகலிடம் அளிப்பதில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஏழாயிரம் அகதிகளுக்கும், தென் ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஐயாயிரம் அகதிகளுக்கும் மற்றும் லத்தீன் அமெரிக்க கரிபியன்தீவுகளைச் சேர்ந்த ஆறாயிரம் அகதிகளுக்கும் ஏனைய நாடுகளைச்சேர்ந்த சுமார் மூவாயிரம் அகதிகளுக்கும் புகலிடம் அளிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி மேலும் உறுதியளித்துள்ளார்.

# தேசியபிரச்சினைக்கு யுத்தம் அழிவையே கொண்டு வரும்

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாணமுற் தடுக்கமுடியாது என ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

முகவுரைக்கு பெரும்வரவேற்பு கிடைக்கும்.

இதை விட்டு விட்டு இராணு

சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30 மணி
மாலை 4-00 மணி, 6-00மணி
(சி-7352)

## சர்வதேச நல்லொழுக்க தினம்

மது விலக்கல், சமாதானம், சகோதரத்துவம் என்னும் உயர் ஒழுக்க பண்பாட்டு ரீதியின் அடிப்படையில் மது போதையற்ற சமாதான, சகோதரத்துவமான ஜாதி, மத பேதமற்ற ஒழுங்கான சுயமான வாழ்க்கையை நோக்கி ஒவ்வொருவரையும் முன்னேற்றும் முயற்சியே சர்வதேச நல்லொழுக்க அமைப்பின் இலட்சியமாகும். உலகளாவிய ரீதியில் அக்டோபர் 03 இத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வகையில் 53 நாடுகளின் அங்கத்துவத்துடன் இயங்கி வரும் சர்வதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஒரு அங்கமாகிய வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனமும் இத்தினத்தில் அமைதியாக, உணர்வுபூர்வமான முறையில் வடபிரதேச மக்களின் நல்லொழுக்க விருத்திக்காக பிரார்த்திக்கும் வகையில் அக்டோபர் 03 இனை அமைதியாக கொண்டாடுகிறது.

வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனம் ஆற்றும் பணிகள் அளப்பரியன. இத்துன்பச் சூழலில் மக்களின் நல்லொழுக்கம் கட்டாயம் பேணப்படுதல் வேண்டுமென் பதனை இத்தினத்தில் ஒரு அன்புக் குரலாக, அறைகூவலாக வெளியிட்டு தமிழ் மக்களின் ஒற்றுமையை பேணுவதில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் மகிழ்ச்சியடைகிறது. அத்துடன் இவ்வாண்டு செப்டெம்பர் 25 தொடக்கம் அக்டோபர் 02 வரையான ஒரு வார காலத்தை நல்லொழுக்க வாரமாக கொண்டாடியதோடு எமது கொள்கைகளை உள்ளடக்கிய தெருக்கூத்தும் நடாத்தப்பட்டது. எனவே இத்தினத்தில் மது போதைப் பொருள் பாவனையற்ற நல்லதோர் சமுதாயத்தை கட்டி எழுப்ப அனைவரும் திடசங்கற்பம் பூண்போமாக.

'மதுவை ஒழிப்போம் மாந்தரை நாம் வாழவைப்போம்'

இவ்வண்ணம்
நெறியாளர் குழுவினர்
வ. பி. ந. சம்மேளனம்
தொல்புரம், சுழிபுரம்.
(6213)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ். மாவட்டம்
### பொதுச் சபைக் கூட்டம்

**காலம்:** 4-10-93 திங்கள் மாலை 3 மணி
**இடம்:** புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்
(எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்)

போர்க்கால சூழ்நிலைபற்றி யாழ் மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் சகல தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள் அனைவரையும் சந்தித்து கலந்துரையாட உள்ளார். ஆகவே தயவுசெய்து இவ் முக்கிய சந்திப்பில் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்
(சி/7543)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

னர் எங்கும்வெளியிடவில்லை.

இந்தியப்படையினர் வாபஸ் பெறப்படவேண்டும் என்ற செய்தி பத்திரிகைகளில் பிரசுரமாகியதைக் கண்டு அன்றைய பாதுகாப்பு ராஜாங்க

## சனி, ஞாயிறு திறந்திருக்கும்

[யாழ்ப்பாணம்]

தற்சமயம் யாழ். குடாநாட்டில் நிலவிவரும் போர்க்கால சூழ் நிலையைக் கருத்தில் கொண்டு வர்த்தகத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் சகல விற்பனை நிலையங்களும் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நேரமாக திறந்திருக்குமென வர்த்தகத் திணைக்கள முகாமையாளர் தெரிவித்தார்.

எனவே மேற்குறிப்பிட்ட நாட்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து விற்பனையை மேற்கொள்ளுமாறு அவர் சகல விற்பனை நிலையங்களின் முகாமையாளர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நெருப்புக்காய்ச்சல் இளைஞன் மரணம்

நெருப்புக்காய்ச்சல்நோயால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த மிருசுவில் வடக்கை சேர்ந்த நடராசா சிவலோகராஜா (வயது 20) என்னும் உயர்தர வகுப்பு மாணவன் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை இறந்தவரின் சகோதரர்கள் நால்வர் இதே நோய்க்காக யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

### கொடிகாமம்

வரணி, எஸ்.தேவி [வயது46] கொடிகாமம், கே. தங்கம்மா [வயது57]கொடிகாமம், என். சோதிமலர் [வயது38] கொடிகாமம், எஸ். செந்தூரன் எழுதுமட்டுவாள் ஆகியோருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இத் தாக்குதலினால் கொடிகாமம் சந்தி வர்த்தக நிலையங்கள் சேதமடைந்தன. நேற்று சந்தை கூடாமையால் பெருமளவு சேதம் தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
[86], [சி]

### கூட்டுறவச்

நேற்று முன்தினம் தொண்டமனாறு காட்டுப்புலம் பகுதிக் கிளையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறி மீது உலங்குவானூர்தி றொக்கட் தாக்குதலை மேற்கொண்டது லொறி ஆபத்து இன்றி தப்பிக்கொண்ட போதிலும் அருகில் இருந்த வீடு சேதமடைந்ததாகவும் எமது செய்தியாளர் அறிவிக்கிறார். (யோ)

# 35 ஆயிரமாக அதிகரிப்பு

(டில்லி)

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் இந்தியாவில் நடக்கும் இயற்கை அழிவுக்காக நிதி உதவியை இதுவரை காலமும் ஏற்க மறுத்துவந்த இந்திய அரசு இப்போது வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவியை ஏற்க முன்வந்துள்ளது.

நிலநடுக்கத்தால் மகாராஷ்டிரா மாநிலத்தில் வீடுகளை இழந்திருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் மக்களுக்கு இருப்பிடம் வழங்க சுமார் 250 கோடி ரூபா தேவை என மகாராஷ்டிரா முதலமைச்சர் சரத்பவார் கூறியுள்ளார்.

அதேவேளை, மகராஷ்டிரத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 35,000 தாண்டக்கூடும் என அஞ்சப்படுகிறது. இதுவரை சுமார் 12,000 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருப்பதால் நிவாரணப் பணி தாமதித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உதவி அரச அதிபரை சந்திக்கலாம்

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபரை சந்திக்கவிரும்புவோர் நாளைதிங்கட்கிழமை தொடக்கம் சாவகச்சேரி புத்தூர் சந்தியில் அமைந்துள்ள கமநலசேவை அலுவலகத்தில் சந்திக்கலாம் என தென்மராட்சி உதவிஅரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (86)

### [illegible]

திஸ்ஸ அத்தநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இக் கூட்டத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், பீடங்களின் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பல்கலைக்கழகங்களின் ஒவ்வொரு பீடத்திற்கும் 9000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்றும், நவம்பர் 22ஆம் திகதிவரை பல்கலைக்கழக அனுமதிகோரி விண்ணப்பிக்க முடியுமென்றும் எதிர் வரும் 18ஆம் திகதிமுதல் அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஏழாயிரம் அகதிகளுக்கும், தென் ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஐயாயிரம் அகதிகளுக்கும் மற்றும் லத்தீன் அமெரிக்க கரிபியன்தீவுகளைச் சேர்ந்த ஆறாயிரம் அகதிகளுக்கும் ஏனைய நாடுகளைச்சேர்ந்த சுமார் மூவாயிரம் அகதிகளுக்கும் புகலிடம் அளிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி மேலும் உறுதியளித்துள்ளார்.

# தேசியபிரச்சினைக்குயுத்தம் அழிவையே கொண்டு வரும்

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாணமுற்பட்டால் அதற்கு வரும் பெறுபேறாக வெறும்அழிவுஒன்றை பெறமுடியும். இதனை யாரும் தடுக்கமுடியாது என ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

ராவய ஆசிரியர் விக்டர் சந்தேசியவுக்கு மேலும்கருத்து தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா ஆகியோர் இவ் பிரச்சினைக்கு தீர்க்கமான ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க தவறியபோதும் தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை உள்ளதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் இதில் டிங்கிரிபண்டா விஜேதுங்கா வேறுபட்டே காணப்படுகின்றார். தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை உள்ளதை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார் என்றார்.

தற்போதைய ஜனாதிபதியின் இந்த கூற்றை பல சிங்கள இனவாதிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுகொண்டுள்ளனர்.

எனவே வடக்கில் மேற்கொண்டுள்ள யாழ்தேவி யுத்த நடவடிக்கை தொடர்பாக பெறுபேறுகளைமுழு இலங்கை மக்களும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டுள்ளனர்.

இராணுவத்தினருக்கு இவ் நடவடிக்கை வெற்றியை கொடுத்தால் வடக்கு-கிழக்கேயுள்ள பிரச்சினை தொடர்பாக டி. பி. விஜேதுங்கா தெரிவித்த பயங்கரவாதம்என முகவுரைக்கு பெரும்வரவேற்பு கிடைக்கும்.

இதை விட்டு விட்டு இராணுவத்தினருக்கு சாதகமாக அமையாவிட்டால் ஜனாதிபதியின் கருத்தை மக்கள் ஏற்றுகொள்ள மாட்டார்கள் இதனை ஒரு பகிடியான கூற்றாக கருதுவார்கள் என்றார்.

எனவே இராணுவம்மேலும் இழப்புக்களுடன் அங்கே தரித்து நிற்பதா? அல்லது இழப்புகள் காணும் என்ற நிலையில் பின்வாங்குவதா என்பதே இன்னும் தீர்மானிக்க முடியாதா நிலையில் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### அச்சுவேலி

அடுத்து பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தமது தொழில்களை கைவிட்டு கரை சேர்ந்தனர். (41)

### இனப்பிரச்சினை

க்கு இராணுவ தீர்வை மையமாக வைத்து செயல்படுவார்களானால் நாடு பிளவுபடுவதை தவிர்க்க முடியாமல் போய்விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தெற்கில் சில சிங்கள மக்கள் இது 'பயங்கரவாத' பிரச்சினை என்றும், இது தேசிய இனப்பிரச்சினை இல்லை என்றும் கருதுகிறார்கள். இதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இது இனப்பிரச்சினை இல்லை என்றால் நான் கேட்க விரும்புகின்றேன் எப்படி இப் 'பயங்கரவாதப் பிரச்சினை' உருவெடுத்தது? இனவாத பிரச்சினையை மையமாகக்கொண்டே ஆயுத போராட்டம் ஆரம்பமாகியது. இதனையே இன்று 'பயங்கரவாதம்' என்கின்றோம்.

எனவே இவ் இனப்பிரச் தீர்ந்தால், பயங்கரவாத பிரச்சினை' தீரும். இனப்பிரச்சினை தீர்க்க தவறினால் என்னுடைய தனிப்பட்ட கருத்தின் படி இரண்டாயிரம் ஆண்டின் முன்னர் நாம் ஈழத்தை கொடுக்க வேண்டி வரும் அல்லது அவர்கள் ஈழத்தை பெற்று விடுவார்கள்.

எனவே கடந்த கால சம்பவங்களையும், எதிர்காலத்தின் நலன்களையும் மையமாக கொண்டு தெற்கு மக்கள் விசேடமாக அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுக்காது விட்டால் ஒரே சிறிலங்கா என்ற பலரின் எண்ணங்கள் ஒருகனவு என்ற நிலைக்கு தள்ளப்பட்டு விடும் என்றார்.

### செல்வெறி

''டி. பி. விஜேயதுங்கா வடக்கு-கிழக்கில் இனப்பிரச்சினை இல்லை எனவும் 'பயங்கரவாதப்' பிரச்சினையே இது என கூறியதை உறுதிப்படுத்தவும், இராணுவத்திற்குத் தெம்பூட்டவுமே இன்றைய இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நான் நம்புகிறேன்.

''அரசு இராணுவ தீர்வை மையமாக வைத்து செயற்படும்போது எதிர்க்கட்சிகள் இது தொடர்பாக இதுவரை மௌனம் சாதித்தே வருகின்றனர். அரசின் இந் நிலைபாடு குறித்து எதிராகவோ அல்லது ஆதரவாகவோ ஒரு கருத்தையும் தெரிவிக்கவில்லை'' என்றார்.

## புற நகர்ப்பகுதியில் மலசலகூடங்கள்

யாழ். நகர்ப்புறப்பகுதிகளில் மலசல கூடங்கள் அமைக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப் படவுள்ளது.

யாழ். மாநகரசபைச் சுகாதாரப் பகுதியினரின் நகர்ப்புற அடிப்படைவசதிச் சேவைகள் திட்டத்தின்கீழ் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் நிதியுதவியுள்ள உதவிகளுடன் ஆரம்பக்கட்டமாககுருநகர், நாவாந்துறைப் பகுதிகளில்இத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதென யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மின் வழங்கல்

யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு புதிதாக மின்சாரம் வழங்கும் சேவை நடைபெற்று வருகின்றது. மின்சாரம் தேவைப்படுவோர் 15-10-93க்கு முன் எமது காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும். மேல் அதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மின் வாரியம்**
தமிழீழ வானொலித் தொடர்பகம்,
பழைய பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம். [சி 7525]